RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்



DOI: 10.34256/irjt224s163

OPEN ACCESS

# கோட்டாறு செட்டியார்களின் மணவுறவுப் பண்பாட்டில் கடைபிடிக்கப்படும் பாவொம் பூஜை பாத பூசைச் சடங்கில் மறைந்திருக்கும் சமூகத் தகுதி அடையாள வரலாற்றுப் பின்புலம்

மி. ஜென்ஸிஸ் குமார் [அ, *]

[அ] தமிழ்த்துறை, பல்கலைக்கழகக் கல்லூரி, திருவனந்தபுரம்- 695034, கேரளா, இந்தியா

# Kotaru Chettiars' Wedding Rituals of Pavom Puja and the Hidden Social Status Symbol in the Foot Worship Ritual

**M. Jencis Kumar [a, *]**

[a] Department of Tamil, University College, Thiruvananthapuram-695034, Kerala, India

* Corresponding Author: jenimea@gmail.com

Received: 24-06-2022
Revised: 18-09-2022
Accepted: 01-10-2022
Published: 12-12-2022

## ABSTRACT

Each caste follows different wedding rituals with a specific meaning. Basically, there are two important rules in a caste. First rule tells who you should not marry and second rule tells who u can marry. The first rule is strict than the second rule. There is no society that does not follow this rule. On that basis, the Kotaru Chettiars are also following the marriage ceremony of their caste group. The kinship structure formed by marriages and the exchange of brides have certain peculiarities. 'Bringing', 'Giving' means bringing the bride and giving to the groom. This happens within the intimate relationship and outside the relationship. In this type of marriage relationship, in South Indian regions, both bride and groom's family are considered equal. But in North India, the tradition is just opposite where bride givers are considered inferior and bride takers are considered superior. So, in the north Indian marriage relationship, the bridegroom's feet are washed by the father of the bride, 'Pavom Puja' is followed. But in South Indian tradition, the groom and the bride fall at the feet of their father and mother and worship their feet. But the Chettiars living in Kumari, a part of South India, are following the North Indian marriage laws, Pavom Puja. What is the reason for this? This article will be an attempt to restore the hidden historical background behind the rituals of Pavom Puja.

**Keywords:** Tholkappiyam Eluthathikaram, Numbers, Alphabets, Sangam Literature.

## முன்னுரை

பண்பாட்டைப் பற்றிப் பேசும் போதல்லாம் அதில் முக்கியமான இடத்தை இந்தியா பெறுகிறது. பழங்காலம் தொட்டு இன்று வரை பண்பாட்டுத் தொடர்ச்சி காணப்படுவது இப்பகுதிக்கானத் தனித்தன்மைகளுள் ஒன்று எனலாம். இந்த நீண்ட பண்பாட்டு வரலாற்றில் மண்ணுக்கே உரிய தனித்த பண்புகளும் அயற்பண்பாடுகளின் பரவலும் நிகழ்ந்துள்ளதை மறுக்கமுடியாது. இன்று இந்தியாவில் காணப்படும் பண்பாடுகளில் பெரும்பான்மையானவற்றுள் கலப்பு நிகழ்ந்துள்ளதை வெளிப்படையாகவேக் காணமுடிகிறது. மானிடவியல் ஆய்வு வழி இதை அணுகும் போது இந்தியப் பண்பாட்டு அமைவில் வடக்கும், தெற்கும் தமக்குள் உறழ்ந்துள்ளதை அறியமுடியும். இந்த நீண்ட காலப் பண்பாட்டு உறவு சில களங்களில் பொதுத்தன்மைகளைக் காட்டுகின்றன என்றாலும் இரண்டுக்குமான தொல் மூலப் படிவ

வேறுபாடுகள் திருமணம், உறவுமுறை, சமயம், மொழி போன்ற களங்களில் இன்னும் தெளிவாக இறுக்கம் பெற்றுள்ளன (Neelakandapilai, 1989). இந்தியத் துணைக்கண்டத்தின் பண்பாட்டு வரலாற்றை இனங்காணவும் மீட்டுருவாக்கவும் உதவக்கூடிய மிக முதன்மையான களங்களாக இவை அமையும். இக்கட்டுரை திருமணம் என்னும் நிறுவனத்தில் கடைபிடிக்கப்படும் பாத பூசை மற்றும் பாவொம் பூஜை சடங்கை ஆய்வுக்கு உட்படுத்தி வடக்குத், தெற்கு ஆகிய இரண்டு பண்பாட்டுப் பகுதிகளின் கருத்தாக்கத்தைக் கோட்டாறு செட்டியார்கள் உள்வாங்கிக் கொண்ட சூழ்ச்சியை ஆராய முற்படுகிறது.

## ஆய்வு அணுகுமுறை

இந்த ஆய்வு மணமுறை சார்ந்தது. திருமணம், உறவுமுறை போன்றவை நாட்டார் வழக்காற்றியல் புலம் சார்ந்தப் படிப்புப் பொருளாகக் கருதப்பட்டு வந்தாலும் அவை மானிடவியல் புலத்தின் இன்றியமையாத படிப்புப் பொருள்கள் என்பது குறிப்பிடத்தக்கது. எனவே மானிடவியல் சார்ந்து ஆய்வுக்கு உட்படுத்துவதே பொருத்தமானதாகும். அந்த அடிப்படையில் இவ்வாய்வு மானிடவியல் அணுகுமுறையைப் பின்பற்றுகிறது. மேலும் இந்தியப் பண்பாட்டில் வடக்கும் தெற்கும் பின்பற்றும் பாவொம் பூஜையையும், பாத பூசையையும் ஒப்பிட்டு முடிவு காண முற்படுவதால் ஒப்பியல் ஆய்வு அணுகுமுறையும் பயன்படுகிறது.

## கோட்டாறு செட்டியார்களும், ஒரு வழி மணவுறவும்

கோட்டாறு செட்டியார்கள் தங்கள் மூதாதையர்களாக கோவலன் கண்ணகி பரம்பரையைச் சுட்டுகின்றனர். இதனால் இவர்களுடைய இடப்பெயர்வு வரலாறு காவிரிப்பூம்பட்டிணத்திலிருந்து துவங்குகிறது. தங்களைப் போன்ற இடப்பெயர்வு வரலாறு கொண்ட, குமரி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் வாழும் செட்டியார்களோடு தங்கள் மணவுறவை ஏற்படுத்திக் கொண்டனர். அத்தகைய மணவுறவில் கோட்டாறு செட்டியார்கள் ஏனைய செட்டியார்களோடு பெண் எடுத்தல் (கொள்ளுதல்) என்ற மணவழி உறவை மட்டுமே பின்பற்றினர். பெண் கொடுத்தல் என்ற மணவழி உறவை தங்கள் ஊருக்குள் மட்டுமே அமைவதாகப் பார்த்துக் கொண்டனர். மானிடவியல் அடிப்படையில் கூறுவோமானால் பெண் எடுத்தல் என்ற ஒரு வழி மணவுறவை மட்டுமே பின்பற்றினர். கொடுத்தல், எடுத்தல் என்ற இருவழி மணவுறவுக்கு உடன்படவில்லை. இதற்கான சமூகப் பின்புலமாகச் சொத்து பாதுகாப்பு குறிப்பிடப்படுகிறது (Neelakandapilai, 1989).

கோட்டாறு செட்டியார்களுக்குத் தங்களது தெய்வமான தேசிக விநாயகர் பெயரில் நகர்ப்புறம் சார்ந்த (கோட்டாறு) மதிப்புமிக்கச் சொத்துக்கள் ஏராளம் இருந்தன. இச் சொத்துக்களை இவர்கள் அனுபவித்துக் கொள்ளலாம். ஆனால் மற்றவர்களோடு எவ்விதப் பரிவர்த்தனையும் செய்ய இயலாது. இவர்கள் மருமக்கள் வழிமுறையைப் பின்பற்றியவர்களாகவும் காணப்பெற்றனர். எனவே மணவழி உறவின் காரணமாகத் தங்களது உட்சாதிக்குச் சொந்தமான சொத்துக்களைப் பிற உட்சாதியினர் அனுபவிக்கும் உரிமையைப் பெற்றுவிடுவார்களோ என்ற அச்சம் அவர்களுக்கு இருந்தது. கோட்டாறு செட்டியார்கள் மட்டும் தலைமுறை தலைமுறையாக அனுபவித்து வரும் இச் சொத்துக்களை பிற உட்சாதிகள் உரிமை கொண்டாட அனுமதிக்கக் கூடாது என்பதில் அவர்கள் மறைமுகமாக உறுதியாக இருந்தனர். எனவேதான் அவர்கள் ஒரு வழி மணவுறவை ஏழூர் செட்டியார்களுடன் வைத்துக் கொண்டனர். கோட்டாறு செட்டியார்கள் மரபுரிமையைப் பெண் வழியாகப் பரிமாறிக் கொள்ள மறுத்ததன் விளைவே புறமணத் தகுதியை இழந்ததற்குக் காரணமாகும். மரபுவழிச் சொத்து கோட்டாறு செட்டியார்களுக்கு மூடிய மரபுரிமைக்கு உட்பட்டதாகும். அது பெண் வழியாக மட்டும் பரிமாறிக் கொள்வதற்குரியது. இவ்வுரிமையைத் தொடர்ந்து கடைபிடிப்பதற்காகவே கோட்டாறு செட்டியார் ஆண்கள் பிற செட்டியார் இனப் பெண்களை மணக்கலாம். ஆனால் கோட்டார் செட்டிப் பெண்கள் பிற செட்டி இன ஆண்களை மணக்க இயலாது என்னும் வழக்கத்தை நடைமுறைப்படுத்திக் கொண்டனர் (Neelakandapilai, 1989).

சொத்துப் பாதுகாப்பு பெரும்பான்மையான சாதிகளிடம் திருமணத்தை அடிப்டையாகக் கொண்டே அமைந்துள்ளது. இதனைப் பல்வேறு அறிஞர்களும் சுட்டிக்காட்டியுள்ளனர். "சொத்துரிமை, பரிசப்பணம், சீர்வரிசைப் பொருள் இவையாவும் குடும்ப உறவு வட்டத்திற்குள்ளேயே சுற்றி வரும் ஏற்பாடாகத் திருமணம் அமைகிறது. இம்முறையில் குடும்பத்தின் மரபும், சொத்தும் திருமணத்தின் வழி இழப்பாவதில்லை என்ற உணர்வு மேலோங்குகிறது என்பதை வெவ்வேறு அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். இப்ஃபோர்டு, ரிவர்ஸ், கிரிச்சாஃப், லெவிஸ்ட்ராஸ் இன்னும் பலரின் கருத்துக்கள் மேற்கூறிய கருத்துக்களை அடியொற்றியே அமைகின்றன" (Baktavatchala Bharathi, 2002).

மேற்குறித்த கருத்துக்கள் திருமணத்தின் வழி சொத்துரிமை எவ்வாறு பாதுகாக்கப்படுகின்றன என்பதை சுட்டிக்காட்டுகின்றன. இக்கருத்துக்கள் அனைத்தும் இருவழிப் பரிமாற்றத்தையே குறிப்பிடுகின்றன. ஆனால் கோட்டாறு செட்டியார்களின் சொத்து அனைத்தும் நகர்ப்புறச் சொத்து ஆகும். ஆனால் இவர்கள் மணவுறவு கொள்ளும் ஏனைய குமரி மாவட்டச் செட்டியார்களின் சொத்து கிராமப்புறம் சார்ந்தவையாகவும் விலை மதிப்பற்றவையாகவும், வருமானமற்றவையாவும் காணப்பெற்றன. இந்த சொத்து மதிப்பிலான வேறுபாடு மரபுரிமையைப் பகிர்ந்து கொள்ளத் தடையாக அமைந்தது. இதனால் ஒருவழி மணவுறவை (பெண் எடுத்தல்) கடைபிடிப்பதில் கவனமாக இருந்தனர். இதுபோல் சமூகத் தகுதி தொடர்பான சிக்கல்களும் மறுபுறத்தில் தடையாய் அமைந்தன. சமூகத்தகுதி வேறுபாட்டை புரிந்துகொள்ள கோட்டாறு செட்டியார்களின் குடிப் பெயர்ச்சி வரலாறு இன்றியமையாதது ஆகும்.

## கோட்டாறு செட்டியார்களின் குடிப்பெயர்ச்சி வரலாறு

செட்டியார்களின் குடிப் பெயர்ச்சி குறித்து பல்வேறு கதைகள் கிடைத்துள்ளன. நாட்டுக் கோட்டை நகரத்தார் சரித்திரம், வைசிய புராணம், களப்பணியில் கிடைத்த கதைகள் எனப் பல்வேறு கதைகள் உள்ளன. எல்லா கதைகளும் செட்டியார்களின் தாயகமாகக் காவிரிப்பூம்பட்டிணத்தைச் சுட்டுகின்றன. அங்கிருந்து அரியூர், இளையாத்தான்குடி, சுந்தரப்படினம் எனத் தமிழகத்தின் பலவேறு பகுதிகளுக்கும் சென்று குடியமர்ந்தனர். குடிப்பெயர்ச்சிக்கு மன்னன் பெண் கேட்டு தர மறுத்ததால் ஏற்பட்ட சிக்கல் காரணமாகச் சுட்டப்பெறுகிறது (Neelakandapilai, 1989).

சோழ மன்னனின் கொடுமையால் தங்கள் இனப் பெண்களையெல்லாம் கொன்று விட்டு அரியூரில் சென்று குடியேறிய இவர்கள் சாலியவாகன சாப்பதம் 1210ல் சர்வதாரி வருடம் ஏற்பட்ட அரியூர் கலகத்தால் அங்கிருந்து வெயிலிலும், மழையிலும் துன்பப்பட்டுத் தங்கள் கையில் கிடைத்த பொருள்களுடன் அந்நகரினை விட்டுத் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளுக்கும் கால்நடையாகவேப் புறப்பட்டனர். அதில் சிலர் கோட்டாற்றில் குடியேறினர். மரகத விநாயகர் சிலை இவர்களிடம் உள்ளது. சிலர் இரணியலில் சென்று குடியேறினர். ஐம்பொன்லோகப் பிள்ளையார் சிலை இவர்கள் வைத்திருந்தனர்.

"நகரத்தார்கள் 7.8 ஆம் நூற்றாண்டுகளில் காஞ்சிபுரம் வணிகர்களாக வாழ்ந்தனர். அப்போதைய மன்னனின் கொடுமையை (பெண் கேட்டதால்) எதிர் கொள்ள முடியாமல் 8000 குடும்பத்தார் தற்கொலை செய்து கொண்டனர். 1502 இளைஞர்கள் மட்டும் தப்பி பிழைத்தனர். இவர்கள் வேளாளப் பெண்களை மணந்து அவர்கள் வழி வந்தோரே நகரத்தார் ஆவர்" (Subramaniya Iyer, 1894).

மேற்சொன்ன இரண்டு சான்றுகளிலும் பெண்கள் எண்ணிக்கைக் குறைபாடு சுட்டப்பெற்றுள்ளதைப் போல் குமரி மாவட்டத்திற்குள் குடிபெயர்ந்த செட்டியார்களிடமும் பெண்கள் எண்ணிக்கைக் குறைபாடு சமன் செய்யப்படாமலேயே இருந்தது. எனவே அவர்கள் தாங்கள் தங்கிய இடங்களின் அருகாமையில் உள்ள சாதிகளோடு மணவுறவு செய்து கொண்டு தன்னிறைவு பெற வழிதேடினர் (Edgar Thurston, 1909).

## குமரி மாவட்ட செட்டியார்களும் மணவுறவுக் குழுக்களும்

சாதிப் புறமணவுறவில் இரணியல் மேலத்தெரு மற்றும் குளச்சலில் தங்கியவர்கள் முக்குவர்களுடனும், பறக்கையில் தங்கியவர்கள் சாணார்களுடனும் திருவிதாங்கோடு மற்றும் இரணியல் கீழத்தெருவில் தங்கியவர்கள் வெள்ளாளர்களுடனும் மணவுறவை ஏற்படுத்திக் கொண்டனர். 'குமரி மாவட்டத்தில் நாடார், முக்குவர் ஆகிய இரு சாதியினரும் அன்றைய காலக் கட்டங்களில் சாதி அடுக்கு முறையில் மிகவும் இழிவாக மதிக்கப்பட்டனர்" (தர்ஸ்டன் எட்கர், 1986). செட்டியார்கள் மேற்குறிப்பிட்டவர்களை விட உயர்நிலையில் மதிக்கப்பட்டனர். ஒரு குறிப்பிட்ட காலம் வரை நாடார்களும் முக்குவர்களும் சாதிய ஒடுக்கு முறைக்கு உள்ளாகி இருந்தனர். இதனால் குடிப்பெயர்ச்சியின் போது ஒரே சாதியாக இருந்த இவர்கள் தாங்கள் மேற்கொண்ட பல்வேறு சாதிகளுடனான மணமுறையின் மூலம் தங்களுக்குள் பல உட்சாதிக் குழுக்களாக மாறினர். இதனடிப்படையில் அவர்களுக்குள் ஏற்றத் தாழ்வுகள் உருவாகின. சான்றாக வெள்ளாளர்களுடன் மணவுறவு கொண்ட கோட்டாறு செட்டியார்கள் சமூகத் தகுதியில் முதல் நிலையிலும், நாயர்களுடன் மணவுறவு செய்த இரணியல் கீழத்தெரு மற்றும் திருவிதாங்கோட்டை சேர்ந்தவர்கள் இரண்டாம் நிலையிலும், சாணார்களுடன் மணவுறவை ஏற்படுத்திய பறக்கைச் செட்டியார்கள் மூன்றாம் நிலையிலும், முக்குவர்களுடன் மணவுறவை ஏற்படுத்திய இரணியல் மேலத்தெரு மற்றும் குளச்சலைச் சேர்ந்தவர்கள் நான்காம் நிலையிலும் வைத்து மதிக்கப் பெற்றனர். இதனடிப்படையில் இவர்களின் சாதிப்பெயரோடு மணவுறவுச் சாதிகளின் பெயர்களும் சேர்த்துப் புனையப் பெற்றன. வெள்ளாளர்களுடன் மணவுறவு செய்தவர்கள் வெள்ளாஞ்செட்டி எனவும், நாயர்களுடன் மணவுறவு கொண்டவர்கள் நாயச் செட்டி எனவும், சாணாருடன் மணவுறவு ஏற்படுத்தியவர்கள் சாணாஞ்செட்டி எனவும் முக்குவர்களுடன் மணவுறவு கொண்டவர்கள் முக்குவச்செட்டி எனவும் அப்பெயர்கள் அமைந்தன. இந்த அக அடுக்கு முறையாக்கம் முழுக்க முழுக்க அவர்கள் சாதிப்புறமணவுறவின் வழி தொடர்பு கொண்ட சாதிகளின் சமூக மதிப்பின் அடிப்படையிலேயே படிநிலைப்படுத்தப் பெற்றது. இதனால் குடிப்பெயர்ச்சியின் போது சமத் தகுதியுடையவர்களாக இருந்த குமரி மாவட்டச் செட்டியார்கள் புறமண சாதியுடனான மணவுறவுக்குப் பின் தங்கள் சமத்தகுதியை இழந்து ஏற்றத்தாழ்வு கொண்டவர்களாக அடுக்கப்பெற்றனர். எனவே இவர்களுடைய மணவுறவு அந்தந்த குழுக்களுக்குள்ளேயே மணவுறவு கொள்ளும் சிற்றூர் அகமணக் குழுவாக மாறியது.

## கோட்டாறு செட்டியார்களும், மணவுறவுச் சிக்கல்களும்

கோட்டாறு செட்டியார்கள் சிற்றூர் அகமண முறையை பின்பற்றியதால் மணவழி உறவுகளை மீறிய திருமணங்களை ஏற்படுத்த வேண்டிய நெருக்கடிக்கு உள்ளாயினர். இதனைத் தவிர்க்கும் பொருட்டு குமரி மாவட்ட ஏனைய செட்டியார்களோடு மணவுறவுக்கு உடன்பட்டு தங்களது மணவுறவுப் பரப்பை விரித்துக் கொண்டனர். முன்னரே குறிப்பிட்டபடி இவர்கள் வெள்ளாளர்களுடன் ஏற்படுத்திக் கொண்ட மணவுறவால் ஏனைய குமரி மாவட்டம் செட்டியார்களைவிட சமூகத்தகுதியில் உயர்வான நிலையில் பார்க்கப்பட்டனர். பிற செட்டியினர்தவர்கள் பல்வேறு பிற்படுத்தப்பட்ட சாதியினரோடு மணவுறவு கொண்டமையால் கோட்டாறு செட்டியார்களுக்கு இணையான சமூகத் தகுதியை இழந்தனர். சமூகத்தகுதி அடிப்டையிலான இந்த வேறுபாடு இவ்விரு உட்சாதியினர்களுக்கிடையே பரஸ்பரம் இருவழி மணவுறவுக்குத் தடையாய் அமைந்தது. இச்சிக்கலை வேறுவகையில் விளக்கலாம். பெண் எடுப்பவர் உயர் சமூக மதிப்புடையவராகவும் பெண் கொடுப்பவர் தாழ்ந்த சமூக மதிப்புடையவராகவும் கருதப்படுவது தமிழகத்தில் பரவலாகக் காணப்படும் மரபாகும். இம்மரபின் அடிப்படையிலேயே கோட்டாறு செட்டியார்கள் உயர் சமூக மதிப்புடையவராகவும் பெண் கொடுப்பவர் தாழ்ந்த சமூக மதிப்புடையவராகவும் கருதப்பட்டனர். பெண் கொடுத்தல், எடுத்தல் தொடர்பான பரிவர்த்தனையில் கட்டமைக்கப்பட்டிருக்கும் சமூகத்தகுதியை மானிடவியலர் உயர்குலத் திருமணமுறை எனக் குறிப்பிடுவர்.

“இந்தியத் துணைக் கண்டத்தின் திருமணமுறைகளை ஆராயும் போது வடஇந்தியப் பகுதியையும், தென்னிந்தியப் பகுதியும் பல தனித்தன்மைகளைக் கொண்டுள்ளமை வெளிப்படுகிறது.

வட இந்தியாவில் சாதி இந்துக்களிடம் பெரு வழக்காக அமையும் திருமணமுறை உயர்குலத் திருமணமுறை ஆகும். இவ்வகைத் திருமண முறை தென்னிந்திய பகுதியில் பெரு வழக்காக இல்லாததால் இதன் அடிப்படையைத் தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டும்.

இந்தியா முழுவதும் ஒவ்வொரு சாதியும் பல கால்வழிக் குழுக்களாகப் பிரிகின்றன. இரத்த உறவையும் சந்ததியின் தொடர்ச்சியையும் இக்குழுக்கள் குலம் கோத்திரம் கூட்டம் பரம்பரை, வகையறா, வம்சாவளி போன்ற பல சொற்களால் குறிப்பிடப்படுகின்றன. இவ்வாறு வடஇந்தியாவில் சாதிகளின் உட்பிரிவுகளாக விளங்கும் குலங்கள் கோத்திரங்கள் கூட்டம் பரம்பரை போன்றவை ஒருபடிநிலையில் அமைந்து அவற்றிற்குள் உயர்வு, தாழ்வு என்று வரிசைப்படுத்தப்படுகின்றன. இவ்வரையறையின்படி பெண்ணை உயர்குலத்தைச் சேர்ந்த மணமகனுக்குக் கொடுக்க வேண்டும். இதனை வேறுவகையில் சொல்ல வேண்டுமானால் பெண் எடுக்கும்போது அவளைக் கீழ்க்குலத்திலிருந்தும் பெண் கொடுக்கும் போது அவளை உயர்குலத்திற்கும் கொடுக்க வேண்டும். இந்த ஒருதிசைப் போக்கில் பெண் கொடுப்போர் தகுதி குறைந்த குழுவினராகவும் பெண் எடுப்போர் தகுதி உயர்ந்த குழுவினராகவும் படிநிலைப்படுவதைப் பிரதிபலிக்கிறது" (Baktavatchala Bharathi, 2002).

வடஇந்தியப் பகுதிகளில் மேற்கொள்ளப்படும் உயர்குலத்திருமணம் தென்னிந்தியப் பகுதிகளில் அதே பொருளில் அப்படியே பின்பற்றப்படுவதாகத் தெரியவில்லை. இருப்பினும் பெண் எடுப்போரின் தகுதி உயர்ந்ததாகவும் பெண் கொடுப்போர் தகுதி தாழ்ந்ததாகவும் படிநிலைப்படுத்தும் மரபு தென்னிந்தியாவில் பரவலாகக் காணப்படுவதை மறுக்க இயலாது. எவ்வாறாயினும் திருமணம் என்பது சமூகத் தகுதியைப் படிநிலைப்படுத்தும் கூறாக வடஇந்தியாவிலும் தென்னிந்தியாவிலும் உள்ளது எனலாம். இதற்குக் கோட்டாறு செட்டியார்களும் சான்றாக அமைவர். இக்கருத்தினைக் கோட்டாறு செட்டியார்களிடம் வழக்கிலுள்ள 'பாதம் கழுவுதல்' (பாத பூசை) என்னும் சடங்கின் வழியாகவும் உறுதி செய்யலாம். மணவுறவின்வழி உயர்வு தாழ்வு என்ற படிநிலையாக்கம் எவ்வாறு சடங்குகளின் வழி செயலாக்கப்படுகிறது என்பதற்கு பாதம் கழுவுதல் சடங்கு சான்றாக அமையும்.

கோட்டாறு செட்டியார்களிடம் திருமணங்களுக்கு மணமகன் அழைப்பு என்னும் நிகழ்வு கடைப்பிடிக்கப்படுவது வழக்கம். "மணநாள் அன்று மணமகள் வீட்டினர் உறவினர்கள் அனைவருடன் ஊர்வலமாகச் சென்று மணமகனை மணப்பெண் வீட்டிற்கு அழைத்து வருவர். அப்பொழுது மணமகளை மணப்பெண்ணின் மூத்த சகோதரன் கையைப் பிடித்து அழைத்து வருவான். மணப்பெண் வீட்டின் முன்னால் மணமகன் வந்தவுடன் தெரு நடையில் போடப்பட்டப் பலகையின் மீது மணமகன் ஏறி நிற்பான். உடனே மணப்பெண்ணின் சகோதரன் கெண்டியிலுள்ள நீரால் மணமகனின் காலைச் சுத்தமாகக் கழுவுவான். மணமகன் தன் காலைக் கழுவிய மைத்துனனுக்குத் தங்க மோதிரம் ஒன்றை அணிவிப்பான்". (நீலகண்டன், 1989) இவ்வாறு பாதம் கழுவுதல் சடங்கு மேற்கொள்ளப்படுகிறது.

இப்பாதம் கழுவுதல் சடங்கில் மறைந்திருக்கும் கருத்தாக்கத்தை பக்தவத்சல பாரதியின் கருத்து மேலும் தெளிவுபடுத்தும். "உயர்குலத்துப் பிறப்புடைய மணமகன் எல்லா நிலையிலும் உயர்ந்தவன் என்னும் கருத்தாக்கம் திருமணச் சடங்கில் பாதபூசைச் சடங்கின் மூலம் வலுப்பெறுகிறது. திராவிடப்பகுதியில் இடம்பெறும் இப்பாதபூசைச் சடங்கில் மணமகன் தாலிகட்டும் முன் தன் பெற்றோர்களுக்குப் பாதபூசை செய்வது ஒரு முதன்மையான சடங்கியல் கூறாக இடம்பெறுகின்றது. வடஇந்தியத் திருமணச் சடங்கில் இதற்கு நேர்மாறான சடங்குக் கூறு இடம்பெறுகின்றது. இது பாவொ(ம்) பூசை எனப்படும். இதன் பொருள் பாதங்களை வழிபடுதல் என்பதாகும். அதாவது மணமகனின் பாதங்களைப் பெண்ணின் தந்தையோ பெண்ணின் மூத்த சகோதரரோ கழுவ வேண்டும். மணமகன் வயதால் குறைந்திருந்தாலும் குலத்தால் உயர்ந்து நிற்பதால் அக்குலப் பெருமையுடைய மணமகனுக்குப் பாதங்கள் கழுவித் தன் மகளைத் தானம் தருவதில் பெண்ணின் தந்தை பெருமை கொள்கிறார். திராவிடப் பகுதியில் இடம்பெறும் இதே பாதபூசையானது பெண்கொடுப்போர் தாழ்ந்தோர் என்றோ பெண் பெறுவோர் உயர்ந்தோர் என்றோ முன்னிறுத்தாததால் மணமக்கள் தத்தம் பெற்றோர்களுக்கு மட்டுமே பாதபூசை செய்கின்றனர்" (Baktavatchala Bharathi, 2002).

வடஇந்தியாவில் வழக்கிலுள்ள பாவொ(ம்)பூசை சடங்கு கோட்டாறு செட்டியார்களிடம் வழக்கிலுள்ள பாதபூசைச் சடங்கோடு ஒத்துப்போவதைக் காணமுடிகிறது. வடஇந்தியச் சாதிகளில்

பெண்ணின் தந்தை அல்லது சகோதரன் மணமகனின் பாதங்களைக் கழுவுவதுபோலக் கோட்டாறு செட்டியார்களிடமும் பெண்ணைக் கொடுப்பவர் அல்லது மணமகளின் சகோதரன் மணமகனின் காலைக் கழுவும் மரபு வழக்கில் உள்ளது. வடஇந்திய மரபிலும் கோட்டாறு செட்டியார்களிடம் காணப்படும் பாதம்கழுவும் சடங்கிலும் மணவுறவுத்தகுதி அடிப்படையிலான படிநிலையாக்கம் செயல்படுவதைக் காணலாம். இம்மரபுகள் அல்லது சடங்குகள் பெண் கொடுப்பவர் தாழ்வான சமூகத் தகுதியுடையவர் என்பதை உறுதி செய்கின்றன. ஒருவர் மற்றொருவரின் பாதங்களைக் கழுவுவது என்பது தன்னை அடிமை அல்லது குறைவான மதிப்புடையவர் அல்லது தாழ்வானவர் என அடையாளப்படுத்துவதாகும். இதன் அடிப்படையில் கோட்டாறு செட்டியார்கள் பின்பற்றும் பாதம் கழுவுதல் சடங்கு என்பது அவர்களுக்குப் பெண் கொடுக்கும் ஏழூர் செட்டியார்கள் தாழ்வான சமூக மதிப்புடையவர்கள் என்பதை ஏற்றுக்கொள்வதை அடையாளப்படுத்தும் குறியீடு எனலாம்.

## முடிவுரை

காவிரிப்பூம்பட்டினத்தைத் தாயகமாகக் கொண்ட குமரிமாவட்டச் செட்டியார்கள் மன்னனுக்குப் பெண் கொடுக்க மறுத்ததால் ஏற்பட்ட சிக்கல் காரணமாக தம்மினப் பெண்களைக் கொன்றுவிட்டு அங்கிருந்து குடி பெயர்ந்து சென்றதாகவும் இதன் காரணமாக. அவர்களுக்குள் மணவுறவுப் பெண்கள் குறைபாடு ஏற்பட்டது என்றும் குடிப்பெயர்ச்சிக் கதைகள் சுட்டிக் காட்டின. மணவுறவுக்கு போதுமான பெண்கள் இல்லாததால் குமரி மாவட்டச் செட்டியார்கள் தாங்கள் குடியமர்ந்த பகுதியின் அருகில் இருந்த பிற சாதிகளோடு மணவுறவு செய்து தன்னிறைவு பெற்றனர். ஆனால் இம்மணவுறவு குடிபெயர்ந்த காலத்தில் சமத் தகுதியுடையவர்களாகப் பார்க்கப்பட்ட இவர்களை புறமணவுறவுக்குப் பின் ஏற்றத்தாழ்வு உடையவர்களாக அடையாளப்படுத்தியது. தாங்கள் மணவுறவு கொண்ட சாதிகளின் சமூக மதிப்பின் அடிப்படையில் ஒரு அகஅடுக்குமுறையாக்கத்துக்கு வழி வகுத்தது. இதில் கோட்டாறு செட்டியார்கள் வெள்ளாளர்களுடன் ஏற்படுத்திக் கொண்ட மணவுறவால் ஒருவழி மணவுறவை பின்பற்றினர் என்பதை அறிய முடிந்தது. அவ்வொரு வழி மணவுறவில் பின்பற்றப்பட்ட பாவொம் பூஜை சடங்கு இவர்களின் உயர்குல மனப்போக்குக்கு வலிமை சேர்த்தது என்பதையும் வட இந்திய மணவுறவு சடங்காகிய உயர்குல மணமுறை மூலம் ஒப்பிட்டு முடிவு காண முடிந்தது. கோட்டாறு செட்டியார்கள் பிற குமரி மாவட்டச் செட்டியார்களுடனான மணவுறவுக்கு ஒத்துக் கொண்டாலும் ஆழ் மனதில் சமூகத் தகுதி வேறுபாட்டையும், மரபுரிமைப் பரிமாற்றத்தையும் கொண்டவர்களாவே காணப்படுகின்றனர். அதன் வெளிப்பாடே இன்றும் அவர்கள் சிற்றூர் அகமணமுறைக்கு கொடுத்துவரும் முக்கியத்துவம் எனலாம்.

## References


Baktavatchala Bharathi, (2002) Tamilar Manudaviyal, Adaiyalam Publications, Chennai, India.

Edgar Thurston, (1909) Thenindia kulangalum Kudikalum, Tamil University, Thanjavur, India.

Neelakandapilai, (1989) Kottaru chettiyar varalarum valviyalum, Magalir Press, Nagercoil, India.

Subramaniya Iyer, P.A. (1894) Thana vasiyarakiya NAttukkottai Nagaraththaar Sarithiram, Desapimaani Press, Thanjavur, India.



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.



**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License